நேற்று (26.02.2026) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மாநில அளவில் நடைபெற்ற 'எல்லோருக்கும் எல்லாம்' விழிப்புணர்வுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 18 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) முனைவர் இரா.பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர்/இணை இயக்குநர் (சமூக ஊடகம்) செய்தித்துறை அ.வே.சுரேந்திரன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமை!

எழும்பூர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.2.03 கோடியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.27- துணை முதலமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளருமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின், எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், 2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்விற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான மாண்புமிகு பி.கே.சேகர்பாபு முன்னிலை வகித்தார். எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ் குமார், மத்திய வட்டாரத் துணை ஆணையர் கௌஷிக், ஐ.ஏ.எஸ்., 108 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எல்.சுந்தர்ராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர், சுப்பராயன் தெருவில் பல பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம், கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்டது. இதனால், சுப்பராயன் தெரு, கந்தன் தெரு, வேம்புலியம்மன் கோவில் தெரு, வைத்தியநாதன் தெரு, அருணாசலம் தெரு, அப்பாராவ் தோட்டம் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்கள், தமது மருத்துவ தேவைகளுக்கு வேறு மருத்துவமனைகளைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், "அ.தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்ட ஆரம்ப சுகாதார மையத்தை அதே இடத்தில் கட்டித் தர வேண்டும்" என இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 20.11.2024 அன்று இச்சுகாதார மையத்திற்கு அடிக்கல் நாட்டிக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார். ஒன்றரை ஆண்டுக்குள்ளாக கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, தமிழ்நாடு துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களால் இச்சுகாதார மையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நவீன சுகாதார மையத்தில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு கவனிப்பு உள்ளிட்டு 30 விதமான மருத்துவச் சிகிச்சைகளும் ஆய்வகப் பரிசோதனைகளும் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50,000 பேர் இச்சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காகத் தனியார் மருத்துவமனைகள், ஆய்வகங்களை நாடிச் செல்ல வேண்டியத் தேவையின்றி, தரமாகவும், எவ்விதக் கட்டணமின்றியும் இச்சேவைகளைப் பெற்றுப் பலன் அடைவார்கள்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் இந்திராகாந்தி, அவைத் தலைவர் விஸ்வநாதன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், பகுதிப் பிரதிநிதிகள் ஆர். செல்வராஜ், முனுசாமி, ஏ.யு.மணிவண்ணன்; வட்டப் பொருளாளர் வெங்கட், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 108 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆ.சூர்யா, 58வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வே.பா. ரோஹித்குமார், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தி.ராஜ்குமார், 77வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சதீஷ், 77 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.உதயநிதி, ச.சூர்யா; 78 வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ.வேலன், அ.ஜெகன்; 78 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.இ.மகேஷ்குமார், 99 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கப்பில்குமார், சு.குணா; செயற்குழு உறுப்பினர் பாபு, எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, தலைமைக் கழகப் பேச்சாளர் தேவநிதி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், கோமகன், ஜெ.சரவணன், எட்டு (எ) விஜயகுமார், கார்த்திகேயன், தன.பிரபாகர், பாக முகவர் கவிதா, வேலு, சிவக்குமார், எல்.குணசேகர், எலிசா, சாந்தி, அசினாபேகம், கபிலன், நாகராஜ், புல்லாபுரம் சுந்தர், சத்யகலா, எழிலரசி, விஷால் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும், பகுதி வாழ் பொதுமக்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதியில் மனிதநேயம் 16 மகளிர் உயர்வில் வேரானவர்! வழங்கும் மனதில் தாயானவர்! என்ற தலைப்பில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர், எம்.சி, தலைமையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், திரைக் கலைஞர் நளினி, ஆகியோர் 73 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்நலத் திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், வி. சுதாகர், எஸ்.சொ. வேலு, சுதா தீனதயாளன் எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை ! இரா.லட்சுமணன் வரவேற்புரை !

ஆர்.கே.நகர் தொகுதியில் 'ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்'! மாபெரும் பொதுக்கூட்டம் !

கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சிறப்புரை ! ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி பங்கேற்பு !

சென்னை, பிப்.27, சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் தொகுதி சார்பில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (27.02.2026 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் கே.என்.எஸ். டிப்போ அருகில் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் தலைமை வகிக்கிறார். ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார். ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் வரவேற்கிறார்.

மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கே.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம் ஆனந்த், ஜி.ராஜா, பா.வேதாசலம், மீஞ்சூர் முகுந்தன், டி.சங்கர், தனசேகர், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, எம்.எம்.சாமி, பி.கே.மூர்த்தி, ஆர்.ரமேஷ், ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், கே.மோகன், சா.திருப்பதிசாமி, வி.முத்து, டி.ஆர்.தணிகாசலம், எம்.ரூபசங்கர்,

கூட்டத்தில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

கே.வி.லோகேஷ், இரா.மதிவாணன், இரா.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, செ.ஜோதி, ஏ.டி.மணி, வெ.சு.சத்தியநாராயணன், டாக்டர் கலைவாணன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, ஆ.மோகன், வி.வி.ரமேஷ், ஒலி ஒளி ஆ.பாபு, இர.பொன்இள வரசன், இ.ரவிக்குமார், டி.வி.முத்துகிருஷ்ணன், த.தமிழ்கொடி, கு.நற்குணம், வண்ணை மோகன், மணிமேகலை ஏழுமலை எம்.சி, தேவிகதிரேசன் எம்.சி, குமாரிநாகராஜ் எம்.சி, பவித்ராநரேஷ்குமார் எம்.சி, வி.கார்த்திக், ம.மதன்குமார், கே.காளிதாஸ், என்.ராஜ், எஸ்.வி.ரவி, ஓ.இ.அழகானந்தம், எஸ்.பாஸ்கர், கே.ரேணுகா, சி.எம்.டேனியல், க.முருகன், எம்.பி.கிளைமண்ட்ராஜ், எஸ்.அரிஸ்குமார், வண்ணைதேவகி சண்முகம், பூங்கோதை, ஆ.விந்தன், மு.ஜெகன், பாஸ்கர், அ.அல்லாபிச்சை, ராஜ்குமார், மணிகண்டன், கமல்தாஸ், சேகர், வெங்கடேசன், ஜே.ஜே. பிராங்கிளின்,

எஸ்.எம்.அப்துல்ரகுமான், எஸ்.பொன்ராஜ், எஸ்.சரவணகுமார், எஸ்.ராஜசேகர், பி.முருகன், கு.யுவராஜ், எம்.சுசீலா, எம்.ஆர்.பி.பழனி, என்பில்டு துரைராஜ், எஸ்.சுப்பிரமணி, எஸ்.பாஸ்கர், பி.விஜயா, எஸ்.தமிழரசன், வி.மூர்த்தி, என்.பி.அஜித், என்.சுப்புராயன், பி.கணேஷ்குமார், டி.தேவேந்திரன், ஏ.கே.பால்ராஜ், மெ.ரசுல்மைதீன், டி.கே.ரதினகுமார், எஸ்.கே.இளங்கோ, ப.ஆ.சண்முகம், கோ.ஹரிராமன், வானூர் கே.ராஜி, எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், ஜே.ஜே.நெல்சன், மற்றும் கழக தோழர்கள் பாக முகவர்களின் பிஎல்ஏ2 கலந்து கொள்கிறார்கள்.

எம்.பி.ஆர்.ராஜன் நன்றி கூறுகிறார்.

டி.ஆர். கோபி தலைமையில் முதல்வர் பிறந்தநாள்

தாம்பரம் 53-வது வட்டத்தில் நல உதவிகள்!

எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

தாம்பரம்,பிப்.27- தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 53வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று 27.02.2026 வெள்ளிக்கிழமை நேரம் மாலை 5,மணி இடம்: கிருஷ்ணா நகர் எட்டாவது தெரு மனோ ஹாஸ்பிடல் அருகில் 53,வது வட்ட கழக செயலாளர் டி.ஆர்.கோபி எம்.சி., ஆகிய என் தலைமையிலும் விஜயராகவன், சிப்ஸ் மணி இளந்திரையன்,கேசவன் ரமேஷ் பாபு, சிவப்பிரகாஷ், பாபு,ராஜேஸ்வரி, வெங்கடேசன், சுரேஷ்குமார், கண்ணபிரான், கிருஷ்ணன், குபா. மனோகரன்,கார்த்திக் ராஜ், நரேந்திரன், லலித்ரஜதீபன்,சுப்ரமணி, தங்கதுரை, கிருஷ்ணகுமார், கோபி, உதயகுமார்,சையது இம்ரான்,சுரேஷ், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அவர்களும் மேயர் க.வசந்தகுமாரி,பகுதி கழக செயலாளர்கள் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன்,தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் ஜா.ரவிக்குமார், ரமணி அதிமூலம், லிங்கேஸ்வரி பாபு, பி.ஜோதிகுமார்,எல்.பெரியநாயகம்,சி.சுரேஷ், கொடி ஆர்.தாமோதரன், சசிகலா கார்த்தி, இரா.விஜயகுமார், இ.மனோகரன், இரா.ரத்தினகுமார், இரா.செல்வகுமார், ஆர்.அகஸ்டின்,டி.கே.தாமஸ், முத்துமாறன், சிவக்குமார், ச.இராஜேஷ், வீ.கார்த்திக், வே.சிவசுப்ரமணியன், எஸ்.கார்த்திக், எஸ்.செல்வபிரகாஷ், குட்டி தினேஷ், இலக்கியா லோகநாதன், ஆர்.செல்வகுமார், இரா.கந்தசாமி, எம்.ரவிக்குமார், இ. கமலக்கண்ணன், ஸ்ரீதர்குமார் எ பாபு, ஆர்.ஜீவன், ஆர். சஞ்சீவி, மு.வினோத், மு.விஜயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

53வது வட்ட கழக பொறுப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறுகிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் திருவுருவச் சிலை!

முதல்வர் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்!

அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் நேரில் பார்வையிட்டார் !

திருவள்ளூர் பிப் 27 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் மேனாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்வினை காணொளி காட்சி வாயிலாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று மரியாதை செலுத்தினர்

அதேபோல் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு ரூ.29.75 கோடி மதிப்பீட்டில் புதிய மலைப்பாதை அமைக்கும் பணிகளை தமிழ்நாடு முதல்வர் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அமைச்சர் பார்வையிட்டு அடிக்கல் எடுத்து வைத்தார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் சென்னை எல்லை சாலை (பகுதி 2) திட்டத்தின் கீழ் ரூ.719 கோடி மதிப்பீட்டில் புன்னபாக்கம் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை வரை புதிய ஆறுவழிச்சாலை மற்றும் இருவழி சேவை சாலைகளை முதல்வர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதில் அமைச்சர் சா.மு.நாசர் அப்பகுதிக்கு நேரில் சென்று அவ்வழி தடத்தில் போக்குவரத்து சேவையை தொடங்கி வைத்து அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் ஆ. கிருஷ்ணசாமி மாவட்ட வருவாய் அலுவலர் ச. சுரேஷ், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் சு.ஸ்ரீதரன், திருக்கோவில் இணை ஆணையர் க.ரமணி, பொதுப்பணி துறை செயற்பொறியாளர் பி.தேவன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் என்.எம்.கனிமொழி, நெடுஞ்சாலைகள் துறை கோட்ட பொறியாளர்கள் சிற்றரசு, அறங்காவலர்கள் வி.சுரேஷ்பாபு, உஷாரவி, திரு.கோ.மோகனன், நாகன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன கண்காணிப்பு பொறியாளர் சி.எ.திலகவதி, கோட்ட பொறியாளர் பி.சங்கர், உதவி கோட்ட பொறியாளர் என்.ரமேஷ்கண்ணா, உதவி பொறியாளர் எஸ். தயானந்தன், தனியார் கட்டுமான நிறுவன பொது மேலாளர் இ.மோகன்ராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதியில் சைதை தொகுதி மேற்பார்வையாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.புவனேஸ்வரி 170 வது "அ "வட்டத்தில் 241 – பாகங்களில் உள்ள மகளிர்களுக்கு, வெல்வோம் தமிழ் பெண்கள் பரப்புரை செய்தார். உடன் மகளிர் அணி நிர்வாகிகள் மகேஸ்வரி, பவானி, ஸ்ரீதேவி, சுபலட்சுமி, பிரேமா, சாமுண்டீஸ்வரி, தீபா ஆகியோர் உள்ளனர்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய

தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்

வ.வீரபாண்டியன் மறைவு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் அஞ்சலி!

காஞ்சிபுரம், பிப்.27 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வ.வீரபாண்டியன் அவர்கள் நேற்று (26.2.2026 வியாழன்) காலை 6.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல் அறிந்த அமைச்சர் தா.மோ. அன்பரசன், கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் சென்னை எல்லை சாலை (பகுதி 2) திட்டத்தின் கீழ் ரூ.719 கோடி மதிப்பீட்டில் புன்னபாக்கம் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை வரை புதிய ஆறுவழிச்சாலை மற்றும் இருவழி சேவை சாலைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதனை தொடந்து அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அப்பகுதிக்கு நேரில் சென்று அவ்வழி தடத்தில் போக்குவரத்து சேவையை தொடங்கி வைத்து அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ். தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன கண்காணிப்பு பொறியாளர் சி.எ.திலகவதி, கோட்ட பொறியாளர் பி.சங்கர், உதவி கோட்ட பொறியாளர் என்.ரமேஷ்கண்ணா, உதவி பொறியாளர் எஸ். தயானந்தன். தனியார் கட்டுமான நிறுவன பொது மேலாளர் இ.மோகன்ராஜ், நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ் , முரளி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.